1. ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க
செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க ஆனைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெலாம்.
தத்புருஷாய வித்மஹே மஹாசேனாய தீமஹி
தன்னோ ஷண்முகப் பிரசோதயாத்.

## முன்னுரை

ஆறுமுகனை எப்பொழுதும் மனதில் தியானித்தால் கேட்டதெல்லாம் கொடுப்பான். வள்ளலாக அருளுவான் என்று திருமுருகாற்றுப்படையினிலே நக்கீரர் சுந்தரத் தமிழில் கூறியதை நாம் வாழ்க்கையில் காண்கிறோம். அருணகிரி நாதர் கந்தர் அலங்காரத்தில் செங்கோட்டு வேலவனை நமக்கு உருவமாகக் காட்டியிருக்கிறார். கந்தர் அநுபூதியினைஓதி அநுபூதி நிலையையடையும் உணர்வினை நாம் கண்டிருக்கிறோம். சஷ்டி கவசம், ஷண்முகக் கவசங்களை தினம் மனதில் தியானிக்கும்போது ஒரு ஒளிவளையத்தை நம்மிடையே அனுபவித்திருக்கிறோம். அந்த கார்த்திகேயனை உள்ளத்தில் நிறுத்தி, அவனை முன்னிலைப்படுத்தி, அடியேன் சில பாமாலைகளை அவனுக்கு சமர்ப்பிக்க விழைகிறேன். அகரமுதலாகிய முப்பது எழுத்துக்களையும் அஃகாரத்தையும் கூட்டி ஒருகடவுள் வாழ்த்தினை அருளி, அந்த சோதிரூப முருகனே இந்த சொல்லோவியத்தை என் மூலமாக வழங்குகிறான் என்பதைக் கொளல் வேண்டும் என்று பரிதிமதியாகிய நான் இங்கு உரைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பக்தி நூலைத் தொடங்குகிறேன்.

– பரிதிமதி

## ஓம் சரவணபவ

**அ**வனியெல்லாம் இரட்சிப்பாய் கந்தாமுருகா
**ஆ**வினன்குடி வாழ் வேந்தனே கந்தனே

**இ**சையில் போற்றி உனை நான் வாழ்த்துகிறேன்
**ஈ**வாய் எனக்குன் கருணையையும் அன்பையும்

**உ**மையம்மை மைந்தா பாலா கதிர்வேலா
**ஊ**ழ்வினை அறுத்து என்னை ஆதரிப்பாயே

**எ**ங்கெங்கு நோக்கினும் உன் சக்திரூபம்
**ஏ**ழ்பிறப்பிலும் என்னுடன் நீயிருந்திடுவாய்

**ஐ**ம்புலன்களை யடக்கி உன்னை யாசிக்கிறேன்
**ஒ**ப்பிலா மணி நீயே உன்னை ஏத்திடுவேன்

**ஓ**ங்காரத்துள் வெளியே நீ ஓடிவருவாய்
**ஔ**வைக்கு தீந்தமிழைத் தந்தவனே கடம்பனே

**அஃ**றிணைப் பொருளிலும் ஒளிர்கின்ற சோதியே
**க**ண்களால் நான் உனை காணவேண்டும்

**ங**ங்கென்று என்னையே கண்டித்து இருந்து
**ச**ராசரம் தனில் எனக்கு நல்வழி காட்டிடுவாய்

**ஞ**ாலத்தின் தர்மம் தழைத்திடுமே உன்னால்
**ட**ண்ணென்று ஒலியெழுப்பிக் கை கூப்பி வணங்கி

**எண்**ணெழுத்தை எனக்கருள வேண்டிடுவேன் நானே
**த**ந்திடுவாய் நல்லொழுக்க நெறியும் வாழ்க்கையும்

**ந**ந்தகோபன் மால்மருகனே இச்செகத்து சோதியே
**ப**ங்கமில்லா வாழ்க்கையைப் பூரணமாய்த் தந்திடுவாய்

**ம**ந்தனென்னை சோதிக்காமல் கடைக்கண் நோக்கினால்
ரத்தக்காட்டேரி சூலம் பிணியணுகாமல் காத்திடுவாய்

லட்சுமியை என் மனையினிலே எப்போதும் இருத்திடுவாய்

**வ**ந்தனை செய்துன்னை புகழ்கிறேன் மறுகுகிறேன்

**எ**ள்ளளவும் சினமின்றி எங்கள் மனை காத்திடுவாய்
சு**ழ**ல்கின்ற வாழ்க்கை சக்கரம் தனில் எப்போதும்

சி**ற**ப்பாக வைத்திடுவாய் சஞ்சலத்தை யகற்றிடுவாய்
ம**ன**த்திலே சலனமின்றி பாமாலைசூட அருள்வேண்டுகிறேன்

1. ஓங்காரப் பரம்பொருளே ஷண்முகக்கடவுளே
ஓங்கும் கருணையான சிவனின் சோதியே
ஆனந்த ரூபனே ஆறுமுகக்கடவுளே நீ
ஆறெழுத்தை ஓதுகிறேன் ஓடிவருவாயே.

2. சிக்கலில் எழுந்திருப்பாய் சிக்கலைத் தீர்த்திடுவாய்
மக்களெல்லாம் போற்றும் மாணிக்க வேலனே
ஆடும் மயிலினிலே ஓடி வந்திடுவாய் நீ
பாடும் அடியாரின் பழவினையைத் தீர்த்திடுவாய்

3. சிங்கார வேலனே உனையே நான் தொழுவேன்
பாங்காகவே என்னைப் பண்புடனே வைத்திருப்பாய்
ஞாலமெல்லாம் நினது புகழை ஏத்திடுவேன் நானே
ஞானக் குழந்தை நீயேயுனது சேவடி நான் பணிந்தேன்

4. ஆதரவு காட்டிடுவாய் ஆதிமூலப் பரம்பொருளே
மாதிரியாக நான் வாழ வழிமுறை செப்பிடுவாய்
குன்றிருக்கும் இடமெல்லாம் ஓங்கியுயர்ந்தவனே
மன்றி நின்றேன் உன்னிடமே தாளடி நான்பணிந்து.

5. செம்பூரின் வடிவேலா தண்டபாணித் தெய்வமே
தெய்வயானை வள்ளி மனங்கவரும் முருகனே
கொக்கரிக்கும் சேவலைக் கொடியில் வைத்தவனே
நீக்கமற நிறைந்திருப்பாய் என் கருணைத் தெய்வமே

6. குமரகுருபரா குருவாய் நீ வந்திடுவாய்
குமாரகோவில் முருகனே நீ ஏற்றமளித்திடுவாய்
கரும வினைகளைக் களைந்து அருள்மேவி
கணத்தில் வந்திடுவாய் கழுகு மலையப்பனே.

7. தோவாளை முருகனே தோகைமலை வேலவனே
தேவானைப் பிரியனே மால்மருகா ரஷிப்பாய்
தேவசேனாபதி யுன்னை செந்தூரில் கண்டிட்டேன்
தெய்வவள்ளி மனம் உறை சிங்கார வேலனே.

8. நவகோன் பதிநீயே நவவீரர் தலைவனே
நவரத்தினங்களால் உன்னைப் போற்றித் தொழுவேனே
சிவசக்தி சோதியாகத் தரணியில் அவதாரம்
தவமுனிவர் போற்றிடுவார் உனது பண்பினையே

9. சரவணபவ என்று உன்னை நாளும் துதித்திடுவேன்
சரவணப் பொய்கையில் அவதரித்த சோதியே
தடுத்தாட் கொண்டிடுவாய் தத்துவப் பரம்பொருளே
சடுதியில் வந்திடுவாய் அய்யப்பன் சோதரனே

10. கந்த கோட்டம் தனிலே வேலெடுத்து நின்றாய் நீ
கந்தகிரி தனிலே உமையாள் முன் நின்றாய் நீ
செந்தூரக் கடலோரம் சக்திவேல் தாங்கி நின்றாய்
சிக்கலிலே நீ சக்திவேல் வாங்கி நின்றாய்

11. வேலாயுதம் பெற்ற வடிவேலா தமிழ்க்குமரா
மேலாயுதம் இல்லையுன் சக்திவேல் அதனின்றும்
மால் மருகா வள்ளி மணவாளா என்றுன்னை
சேல்பட்டொழிந்த செருக்கில்லாமல் வழுத்துகிறேன்

12. சித்தமல மகற்றியென்னை சித்தனாயாக்கிடுவாய்
கிலேசமற்ற மனத்துடன் உன்னை யாசிக்கிறேனய்யா
உருவெளியற்ற தன்மையைக் கொடுத்திடுவாயப்பா
உருவெளித்தோற்றமே மாயமென்றறிந்திடச் செய்

13. ஆங்காரமிலா மனத்தினை நீ தந்திடுவாயே
ஓங்கார சோதியினை நீ அளித்திடுவாயே
உன்னையே நான் சிக்கெனப் பிடித்திட்டேன்
என்னுடைய வேந்தனே ஏமாப்பில்லாக் கடவுளே.

14. மாதவ முனிவர்கள் தீந்தமிழில் பாடிடுவார்
ஆதவனென சிவனின் ஒளிப்பிழம்பில் அவதரித்தாய்
ஆம்பல்களில் குழவியாக சோதி மாறியதென்று
தேம்பால் கந்த புராணத்தில் இயம்பிட்டார்.

15. கார்த்திகை மாந்தர் பட்டமங்கலம் குருவால்
நேர்த்தியான சாபவிமோசனம் பெற்றதன்பின்
கந்தனைச் சேர்த்தெடுத்து உமை தாலாட்டும்முன்

சொந்த மெனச் சீராட்டித் தாலாட்டி வளர்த்தனரே.

16. பாலமுருகன் இளம்பிராயம் எங்கும் களியாட்டம்
ஞாலமெங்கும் ஓடியாடி விந்தைகள் செய்தனரே
எட்டுத் திக்கதிபர்களும் குழந்தையின் ஆடல்களைக்
கண்டு களித்திட்டு உள்ளம் நெகிழ்ந்தனரே.

17. நெற்றிக்கண் சுவாலையினால் வந்தவன் முருகன்
பற்றிற்ற தேவரின் இடர்களை நீக்கிடவே
சூரபதுமன் தேவர்களை சிறையிட்டு வதைத்தான்
சிரம்தாழ்த்திப் பணிந்திருந்தனர் சூரனின் கொடுமையிலே.

18. அமராவதிப் பட்டிணம் துயறுற்று இருந்ததே
எமபயம் தேவர்களுக்குப் பரவியிருந்ததே
காராக்கிருகமதிலும் சிறையிலும் அவதியுற்று
மாறாத கலக்கத்தில் தேவர் மாய்ந்தனரே.

19. தஷிணக் கடவுள் த்யானத்தில் ஆழ்ந்திருந்தனர்
எஷணமும் படைப்புத் தொழில் நின்றே போனதே
சூரனின் கொடுமைகளை யார் அடக்குவார்
பேர் சொல்ல தேவருக்கு யார் இருக்கிறார்

20. சூரபதுமனோ ஈசனிடம் வரம் பெற்றவன்
சரங்களும் ஆயுதங்களும் ஊறு செய்யாவாம்
ஞாலமே துவண்டிருந்து வாடிய சமயம்
பானுகோபன் சிங்க முகனால் பெருந்துயரமாம்.

21. ஞானக் குழந்தை முருகனோ விளையாட்டில் மேவி
மோன நிலையிலே பரமேஸ்வரனின் தவமேயாகும்
மறுபடியும் இந்திரன் முதலோர் புகலடக்கம்
மாறும் வினை யெங்கே யென்று விசனமுற்றார்.

22. கயிலைநாதன் பாலமுருகனை அழைத்திட்டார்
செயலினையே அவனிடமே விவரித்திட்டார்
வீரபாகு முதலான நவவீரர் தோற்றம்
சீராக முருகனை தேவசேனாபதியாக்கினார்

23. சிங்கார வேலனை சிக்கலுக்கழைத்திட்டார்
மங்காத புகழ்கொண்ட உமையம்மை சக்தி
வேலாயுதம் என்றோர் ஆயுதம் கொடுத்தார்
சூலாயுதம் ஈசனுக்கு வேலாகும் கந்தனுக்கு.

24. தெய்வயானை திருமணம் திருப்பரங்குன்றத்தில்
தெய்வமே மனையாகும் செந்தில் வேலனுக்கு
கந்தமதானம் என்றொரு மண்ணிலே மலையாம்
செந்தில் பட்டிணம் கடலோரம் இருக்குமாம்.

25. தமிழ்க்கடவுள் முருகனோ நீதியின் உருவகம்
கமழ்மணத்துடன் நின்றிட்டான் வீரபாகுவை யழைத்திட்டான்
சூரனைக் கண்டுவா தூதாகச் சென்றுவா
கூறினான் முருகன் தேவ சேனைத் தலைவன்.

26. சூரனின் பட்டிணம் மகேந்திர புரியாகும்
சீராகத் தம்பியர் மூவர்காத்திட்ட புரியாகும்
வீரபாகு நுழைந்துவிட்டான் மகேந்தர புரியிலே
சிறையில் கண்டுவிட்டான் இந்திராதி தேவர்களை.

27. வந்துவிட்டான் வெற்றிவேலன் செந்திலிலே சேனையுடன்
நொந்த வேண்டாம் தேவர்களே என்றே சாற்றினான்
அமைதியாக சரணடைய சூரனிடம் கூறினான்
சமயோசிதம் கொண்டிருந்த தூதன் வீரபாகுவே.

28. விதியினை யாரால்தான் மாற்ற இயலுமே
மதிகுன்றி நின்றிற்ற சூரன் விலக்கல்லவே
உன்மத்தம் கொண்டிருந்தான் வீரனை ஏசினான்
உன்மத்தம் முடிந்த தடாகந்தன் கரமதிலே யென்றான்

29. உமையவளின் சக்திவேல் கந்தனின் கரத்திலே
எமையாளும் ஈசனின் சக்தியே கந்தனாம்
பானுகோபன் சிங்கமுகன் சடுதியிலே நிதனம்
சூரபதுமன் நின்றுவிட்டான் நிராயுத பாணியாக.

30. கந்தனைக் கண்டான் சூரன் தனியாக
சந்தமின்றி கரங்கள் கூப்புமாம் தானாக
இன்று சென்று நாளைவா வீரனே நீதான்
என்று சொன்ன கார்த்திகேயன் நீதிமானானதால்

31. தாசரதி அன்று சொன்னான் இலங்கேஸ்வரனிடம்
பாசமுடன் பக்தனிடம் ராமன் கூறிய வாக்கியம்
நேசமுடன் பகர்ந்திட்டான் தேவ சேனாபதி
சூரனிடம் அவன் சிவ பக்தனானதினால்

32. கந்தமதானம் தலமாகும் செந்திலம்பதி
அந்த புரி மகேந்திரம் தென்னிலங்கையருகில்
விதியின் போக்கு சூரனுக்கு விலக்கல்லவே
கதிமுடிந்த அந்தநாள் சஷ்டியிலே உதயமாம்.

33. அசுரன் சூரனுக்கு மாயைகள் மிக எளிமை
மகாசுரம் மெய்யினிலே வந்திருக்கும் அவனிடமே
வேங்கை மரமாகி நின்றான் சூரனே
ஓங்கி வளர்ந்திட்ட மரம்பிளந்ததே வேலினால்

34. சூரஸம்ஹார சஷ்டி எல்லோர்க்கும் திருநாளாம்
வேரோடு வேங்கை மரம் வீழ்ந்ததே சூரனுடன்
சரவணபவ நாதன் அருளைப் பொழிந்திடவே
இரு கூறாய்ப் பிளந்த மரம் சேவல் மயிலானதே.

35. மிடுக்காக நடந்திடும் சேவல் கொடியானதே
எடுப்பாக இருந்திடும் மயில் த்வஜமானதே
ஷண்முக நாதன் விசுவரூபமாய் நின்றிட்டான்
கந்தமதான மலையினிலே அமர்ந்தே

36. பாலனாய் அருள் பொழிவான் கார்த்திகையோன்

மாலனின் மருகனாய் நம்மையே காத்திடுவான்
வேலனின் நிழலிலே நாம் உய்யுகின்றோம்
மேலான கடவுளே தண்டபாணித் தெய்வமாம்.

37. அமராவதித் திருநகரில் மறுபடியும் கொண்டாட்டம்
குமுதமென மதிவதனம் தேவேந்திரன் சபையினிலே
ஈசான தேவருடன் அக்கினி நிருருதி
கேசாதி பாதம்வரை சிலிர்த்திட்ட தேவர்களாம்.

38. ஆறுமுகனின் வேலாயுதத்திற்கு எப்போதும் செயமாம்
மாறுபட்ட மனமாகும் தேவர் அசுரர்களாகும்
ஆடும் மயிலில் எப்போதும் ஓடிவரும் முருகன்
பாடுகின்ற பக்தர்களின் மனதில் நிலைப்பான்.

39. செந்தூரின் கடலினிலே நீராடித் தூய்மையுடன்
செந்தூரின் திருக்கோயில் பிரகாரம் சுற்றி
செந்தூரின் தெய்வத்தை ஆழ்மனதில் வேண்டி
செந்தூரம் போலான செம்மையினை நாம் பெறுவோம்.

40. ஓமென்னும் ப்ரணவ மந்திரத்தின் ஒலியை
ஆமென்று உணர்ந்திடலாம் செந்திலம் பதியில்
ஓங்கார தத்துவமாய் விளங்குகிறான் குகனே
சிங்கார வேலவனாய் எப்போதும் அலங்காரம்.

41. நாழிகைப் பொழுதேனும் கந்தனை நினைக்க
நாழிக் கிணறினிலே முக்குளித்து எழுந்திட்டா
உப்புக்கிளறி எங்கும் நிறைந்த மண்வெளியில்
நாழிநீர் பக்தருக்கு எப்போதும் அருளிட்டான்.

42. ஞான மார்க்கமே வாழ்க்கையில் நிலையாகும்
மோனமான நிலையே யாக்கையின் நிதியாகும்
பற்றற்ற வாழ்க்கையை போதிப்பான் முருகன்
மற்றெல்லாம் மாயமே என்றான் கதிர்வேலன்.

43. சஷ்டி விரதத்தை கடமையாய்க் கொண்டிட்டு
அனுஷ்டிப்பார் லட்சமென மக்கள் கடலாகும்
மானிட மக்கள் கடலும் ஓங்கார அலைகடலும்
சூனிய தேகத்தில் எழுச்சிதனை உண்டாக்கும்.

44. குருவாக நின்ற இடம் வேலனுக்கு இரண்டாகும்
கருவின் உட்பொருளை பகர்ந்திட்டான் அப்பனுக்கு
திருவேரகம் தனிலே அவன் சுவாமி நாதனாம்
மருள் நீக்கும் கந்தனாம் செந்திலம் பதியிலே.

45. நானென்னும் அகந்தையை நீக்கிடும் முயற்சியே
கோன்குகனாம் மால் மருகனின் சூரசம் ஹாரம்
மனத்துள் அமைந்திட்ட கழுமலம் கசடேயாம்
சினமாகும் என்ற சிங்கமுகன் பானுகோபன்

46. வேலுண்டு வினையில்லை யாமிருக்க பயமேன்
மால் மருகன் அடியினையே பணிந்திட்ட மக்களுக்கு
வேறெந்தக் கடவுளும் இத்துணை கடை நிலையை
கந்தன் போல் அளிக்கமாட்டார் காருண்ய தேவன் தானே.

47. கதிர்காமம் என்ற ஊரில் கந்தன் நின்றிட்டான்
காமமெனும் உணர்வினைத் தள்ளிடவே வந்திட்டான்
ஒரு நாள்நான் கதிர்காமம் வரவேண்டுமைய்யா
மறுபிறவி ண்டோமென பணிய அருள்வேண்டும்.

48. மெய்யினிலே அலகிட்டு வருத்திக்கொள்வாராம்
பொய்யதுவே மெய்யெனக் கருத நினைந்திடுவார்
கீழ் மலையா நாட்டினிலும் கந்தன் இருப்பாராம்
தோழமை காட்டினாரே குறஞ்சிக் கடவுளே.

49. ஆத்திசூடி பாடியவள் தமிழ்க்கிழவி அவ்வையே
நேத்தியாக அவளையே தமிழ்க்கடவுள் வென்றனரே
கணநாதன் அருளினால் முதுமை அடைந்திட்ட
குணமான அவ்வைக்கே சுட்டபழம் தோன்றவில்லை.

50. துறவுகுணம் பூரணமாக அடையவேண்டியிருக்க
உறவு நிலைகளையெல்லாம் மேலாக விலக்க
சிறந்திட்ட நிலையையே சுட்டபழம் என்றார்
மறந்திடாமல் அதனாலே முருகனையே தொழுவாய்

51. பரம் பொருளையடைய பரங்குன்றையடைவாய்
பரங்குன்றத்தில் தெய்வக் களிறை மணந்திட்டார் வேலனே
நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடி தொழுதார்
எக்காலமும் சரவணனை வேண்டியே இருந்தார்.

52. தெய்வத்திருமணம் தெய்வயானை திருமணம்
அயனாரும் மாலவரும் ஆசித்த திருமணம்
சிவனாரும் உமையவளும் நடத்திட்டதிருமணம்
அவனியிலே தேவர்கள் குழுமிய திருமணம்.

53. பழமுதிரும் சோலையினில் அமைதிமுகம் மேவும்
எழுபிறப்பிலேயும் உடன் அருள் மேவும் குணமாய்
வள்ளி தெய்வயானையுடன் மேவி நின்ற கோலம்
அள்ளிக் கொண்ட அழகே சோலைமலைதானே.

54. பிரணவத்தின் பொருளை மறந்துவிட்ட அயனை
சரணடைய வேண்டி சிரம்குட்டி சிறையில்
சிருட்டித் தொழிலதனை தானே செய்வகையில்
சிருங்கார வேலன் பார் போற்றும் தெய்வமே

55. திருவே உருவானான் ஆவினன் குடியப்பனே
மேருவென தமிழ் மண்ணில் திருப்பழனிப் பதியாகும்
சித்தர்கள் நவபாஷாண மூலிகையில் செய்திட்ட
சித்தத்தில் திளைக்கின்ற தண்டெடுத்த வேலனே.

56. அதிகாலை திருநீற்றால் அலங்காரமெய்யழகும்
அதிரூப சுந்தரனாய் சந்தனத்தில் மெய்யுருவம்
அரசனாகிக் கிரீடம் தரித்து கோலோச்சும் ஒருருவம்
எல்லாம் துறந்த முனி ஆண்டியாய் ஒருருவம்.

57. இத்துணைத் தோற்றங்களும் வாழ்க்கையைக் காட்டிடவே
இத்தியாதி நிலைகளுமே மனிதனின் படிகளாகும்
ஆண்டியும் அரசனும் ஒன்றெனக் கொள் மானிடனே
தோன்றிற் புகழொடு மேதினியில் நிலைத்திடடா.

58. ஞானப் பழத்தினை சிவனாரும் அளிக்கவில்லை
ஞானப் பழமே நீதானே உனக்கெதற்கிப்பழம்
என்ற உட்கருத்தாய் சிவனாரும் செய்திட்டார்
என்பதனை உருக்கி தவம் செய்யும் முருகனுக்கே.

59. அன்பே முருகன் அன்பே சரவணன் சித்தமலமடக்கி
மன்பதையில் வாழுமட்டும் அவனே சிவகதியே
தெம்பிருக்கும் மெய்யினாலே பூசித்திடு அப்பனே
தெம்பிலா நிலை வருகையில் தண்டம் அளித்திடுவான்.

60. சண்முகன் ஒருவனே காருண்யக் கடவுளாம்
வெண்ணீறு தரித்திட்டு அவனடியே பற்றிடடா
பழனிமலை வேலவன் தடுத்தாண்டருளிடுவான்
கழுமல மகற்றிட்டு சரணமடைந்திட்டாலே.

61. எழில் நடன மாடிடுமாம் வண்ணக் கலாபங்களாம்
சுழித்திட்டு காற்றடிக்கும் மழைமாரி சூழ்ந்திடுமே
தோகை மயில்கள் படிகளில் ஓடுவதாயிருக்குமே
வாகைசூடிய ஆறுமுகன் மேவிடுவான் விராலியிலே.

62. பச்சைவயல் வெளிகளாம் சூழும் வரப்புகளாம்
இச்சைகளைக் களைந்திடுவான் வயலூர் கந்தனே
குமார வயலூர் எழில் முருகனைக் காணக் கண்கோடி வேண்டும்
தேவானை வள்ளியுடன் சுந்தரக் கோலத்தில்

63. குன்றத்தில் குடிகொண்டான் சண்முக வடிவேலன்
மன்றாடி வேண்டிட்டால் காட்சியருளிடுவான்
இச்சைக்கும் கிரியைக்கும் இரு தேவிகளுடனே
தோகை மயில் வாகனத்தில் வேல்முருகக்கடவுள்.

64. பேர் சொல்ல பிள்ளை தக்கவில்லை யென்றால்
நேராக சன்னதியில் முருகனுக்கு விற்றிடலாம்
தத்துப்பிள்ளையாய்த் திரும்பிவரும் போதில்
சித்த மலமகற்றி ஆயுள் தந்திடுவார்.

65. ஆறுமுகத்துடன் எழில் முருகன் இருப்பான் சில ஊர்களில்
ஆறுகின்ற மனத்தினை வேண்டுவர்க்களித்திடவே
ஆறாகஓடுமே பக்தி சுவை பெருக்கெடுத்து
ஆறுமுகன் சன்னதியில் அமைதியுடன் நின்றிட்டால்

66. அகந்தைக்கு இலக்கணம் சேவலும் மயிலுமே
அகந்தையை அழித்திடவே மயிலேறி நின்றிட்டான்
புள்ளினத்தில் மிகசக்தி மயில்பறவை ஒன்றினுக்கே
அப்புள்ளே சரணமாகும் முருகனின் அருகினிலே.

67. கௌமாரத்தை ஆசரிப்பவர் முருகனின் அடியவர்
நீதிநெறி வாழ்க்கை முருகனடியவர் தத்துவம்
தண்டபாணித் தெய்வமாய்த் தரையினிலே தோன்றிற்றான்
தர்மத்தை நிலைநாட்ட அசுரகுணம் ஒழிந்திடவே.

68. நான் நான் என்றிடும் மனமே மயிலாகும்
எனதெனது என்றிடும் மனமே சேவலாகும்
மையல் கொண்ட வள்ளி தெய்வானையுடனே
மயிலினை அடக்கி நின்றான் கோழிக்கொடியுடனே.

69. கார்மேக வண்ணனாம் கண்ணன் குழலூதிட
பாஞ்ச சன்ய சங்கு ஊதி அர்ச்சுனன் நின்றிட
அனுமனின் தோள்துணையுடன் ராமன் எழுந்திட
கண்ணனின் பிறகாகி விசுவரூபம் கொடுத்தான் வேலனே.

70. மலர்மிசை மேவினான் சரவணப் பொய்கையில்
செருவினனாகி நின்று தெய்வக்களிறை மணந்து
வள்ளித் தோப்பிலே எளியமங்கை குறத்தியை
கள்ளினான் மணமாகி தணிகைக் குன்றினிலே.

71. வள்ளிமலையிலே முருகனைக் கண்டீரோ
விராலி மலையிலே சரவணனைக் கண்டீரோ
கழுகு மலையிலே கார்த்திகேயனைக் கண்டீரோ
ஆவினன் குடியிலே என் அப்பனைக் கண்டீரோ.

72. என்னால் வர இயலாவிடில் மயிலை அனுப்பிடுவீர்
மன்னா என்னை நீயே ஆலிங்கனம் செய்திடுவீர்
உனக்கென்று தந்திட்டார் கந்தரலங்காரம்
மனத்தாலே செய்திடுவேன் எந்நாளும் அலங்காரம்.

73. மனமொன்றியுன் சன்னதியில் நின்று மயங்கிட்டேன்
சினமின்றி நீயென் இல்லத்தில் நின்றிடுவாய்
ஆதாரப் பொருளே நீயனைத்து உலகெல்லாம்
சேதாரமில்லாத வாழ்க்கையை அளித்திடடா.

74. நல விஷங்களால் உன்னை சித்தர் அமைத்தார்
நவக்கிரகத் தாக்கலை எளிமையாக்கிடவே
பழம் நீ யென்று கூறித் தனித்து நின்றாய்
பழமாகி விதையாகி நிலத்தில் வீழவே.

75. குறிப்பறிந்து செயல்களை நீ செய்வித்திடவே
நெறிமுறை வாழ்க்கை தனை விளம்பி நின்றாய்
நெறிதவறி அல்லல் பட்டால் கைவிட்டு நீயே
மறு பிறவி தனிலும் குருவாய் தண்டமிடுவாய்.

76. கந்த கோட்டம் தனிலே உன்முன்னே நின்றிருந்தேன்
மந்த நிலை நீக்கி ஞானம் தன்னை போதித்தாய்
தகப்பன் சுவாமி நீயென்பதில் அய்யமில்லை ஐயா
ஏரகத்தில் கண்டுவிட்டேன் என் கந்தனையே நானே.

77. ஆறறிவை ஞாலத்தில் எல்லோர்க்கும் அளித்து
ஆறுமுக வேலனாகப் புகழை அடைந்தாய்
வேலாயுதம் சூலங்களில் ஒருவகையாகும்
மால் மருகன் கையிலே தீமைக்கு சாக்காடாகும்.

78. தடந்தோள் ஆறுடையாய் உனது ஒருபக்கம்
தடந்தோள் ஆறுடையாய் உனது மறுபக்கம்
ஆறிரு கண்களும் கருணையைச் சொரியுமே
ஆறிரு கண்களும் திங்களுக் கொன்றாகுமே.

79. சூலாயுதம் வேலாயுதம் சங்கு சக்கரமாம்
மேலாயுதம் இல்லாமல் எல்லாமும் முருகனிடம்
தேவசேனாதிபதியாக ஈசன் நியமித்தான்
மேவியாட்சி செய்கிறான் மால்மருகன் எப்போதும்.

80. தாமரைத் தடாகத்தில் வளர்ந்த குழவியே
உமையம்மை ஆட்கொண்ட செல்லக்குழவியே
சென்னியிலே கடம்ப மாலையும் வெட்சியும்
குறிஞ்சிக்கோன் முருகன் சுப்பிரமணியனவன்.

81. திரிசூலம் ஏந்திநின்ற திரிபுரமெரித்த ஈசன்
எரித்திட்டான் சூரனின் மகேந்த புரியதனை
பரிந்திட்டான் சூரனுக்கு ஆத்தும தூய்மைக்கே
அதுவரை அப்படி தெய்வம் வீடுபேறு தரவில்லையே.

82. இராசாதி ராசனாக பழனியில் விளங்குபவன்
வீராதி வீரனாக செந்திலில் நிலைப்பவன்
தண்டெடுத்து ஆண்டியென தக்கணமே மாறிடுவான்
தண்டாயுதபாணியே தமிழவ்வை போற்றியவன்.

83. அறுபது படிகளெல்லாம் அறுபது தமிழ் வருடம்
தணிகைமலை படியெல்லாம் ஒவ்வொரு நாளாகும்
ஈராறு கண்கரமெல்லாம் தமிழ்த்திங்களாம்
ஓராறு முகங்களெல்லாம் ஆறு ருதுக்களாம்.

84. வெற்றிவேலன் சாந்தமென நின்றிடும் நற்கோலம்
பற்றில்லா நிலையதனை அருளிடும் கோலம்
வள்ளி தெய்வ அன்னையுடன் ஆசிடும்கோலம்
தெள்ளு தமிழ் அழகர் மலையில் நின்றிடும் கோலம்.

85. குருபரனே அருள்குருவே ஆனந்த வடிவே
நாதனுக்கு நாதனே நிற்கின்ற அருளே
தமிழன்னை அவ்வையிடும் வாதிடும் எழிலே
என்னருமை ஷண்முகனே கதிர்காமத்திருவே.

86. பூதியினை உடலெல்லாம் பூசியதன் நோக்கம்
சேதியினை காயமெல்லாம் பொய்யென நீக்கம்
சந்தனத்தால் அலங்காரம் செய்வதன்எண்ணம்
சுந்தரமாய் தமிழ் மணந்து அருளிடும் வண்ணம்.

87. செங்கோட்டு வெற்பினில் தமிழ்க் கடவுள் வேலுடன்
வல்லக்கோட்டை தனிலே நின்றிட்டான் வேலுடன்
தவசிமலை முகட்டினிலே மேவினான் வேலுடன்
செந்தில் கடலோரம் ஏந்திட்டான் வேலினையே.

88. மருதமலையில் ஏறிநின்றான் தமிழ்க்கடவுளே
மாருதமும் குறிஞ்சி நிலமும் வேல்முருகனுக்கே
பாம்பாட்டி சித்தர் உன்னிடம் மயங்கிட்டார்
மால் மருகனுக்கு தேவர்படைவீடு எடுத்திட்டார்

89. வள்ளிக்குகை செந்தூரில் இருக்கும் தலமாகும்
வள்ளியைத் தேடி வேலன் ஓடிமறைந்த தலமாகும்
நாழிக் கிணற்றில் நந்நீர் எப்பொழுதும் இருக்கும்
நாழிகைத் துளிகளில் வேலனைக் காண்பிக்கவே.

90. நாள்தோறும் திருப்புகழைப் பாடவேண்டும்
கோள்களின் நடைமுறையை அறுதியிடவேண்டும்
கந்தனின் மேனியில் கடவுளர னைவர்களாம்
கந்தரலங்காரமே சிறந்த இறைவழி பாடாகும்.

91. ஈராறு கண்களால் மேதினியை ஆண்டிடுவான்
ஓராறு முகங்களால் பிரளயத்தை நிறுத்திடுவான்
ஆண்டிக் கோலமே சர்வ அயிசுவரியங்களாம்
தோன்றிய நாள் முதல் சிவனே ஆண்டியப்பன்.

92. மனமென்னும் ஆலயத்தில் சர்வாதி தேவனாவான்
கலாப மயிலின்மேல் வீற்றிருந்து நம்மை ஆள்பவன்
குன்றிருக்கும் இடமெல்லாம் தண்டபாணித் தெய்வமே
சிரத்தினில் கண்களிருப்பதே வேலனை வணங்கவே.

93. மடமானின் வயிற்றினிலே தேவவள்ளி உருவானாள்
மடமென்னும் குணமாகும் பொதும்பையின் மரபாகும்
நாற்குணங்கள் மடந்தையரின் பூர்வீக உடமையே
படைக்கலனும் அவையே பெருமைகளும் அவையே.

94. சங்கநிதி பதுமநிதி இறைவனின் அவையிலே
அங்கிருந்த இருவருமே கந்தனின் கிழத்திகளாம்
வள்ளியும் தெய்வக்களிறுமே வேலனின் பெருமை
அள்ளிக் கொடுத்திடுவார் அன்னை இருவருமே.

95. வேலுண்டு முருகனிடம் தீமைகளை யழிக்கவே
மாலனுக்கு சக்கரமாம் கந்தனுக்கு வடிவேலாம்
வாலாயுதம் அஞ்சனுக்கு வேலாயுதம் குகனுக்கே
நால் திசையும் பாய்ந்திடுமே சுடரொளி வந்திடுமே.

96. புற்றிலே தோன்றிற்றான் சுப்பிரமணியத்தலத்திலே
செற்றம் நிறைந்திட்ட மலைச் சாரலடியினிலே
மேகங்கள் பனிமழை எப்போதும் இருக்குமே
தலைவனின் சன்னதியில் கர்நாடக மண்ணிலே.

97. காட்டி சுப்ரமண்யா என்றிருக்கும் இடமாகும்
கார்த்திகேயன் விளங்குகிறான் பாம்பினுருவிலே
குன்றென உயர்ந்து நிற்கிறான் வேல்முருகனே
நாக தோஷம் தீர்ந்திடவே அரவை வணங்குவரே.

98. சத்தியமே முருகன் சாந்தமே அருள்முருகன்
பத்தும் அருளிடுவான் பால வேல்முருகன்
தணிகைக்குன்றினிலே மலையின் படிகளே
வருடத்தின் நாட்களைக் குறிக்கும் கற்களாம்.

99. ஸ்கந்தாஸ் ரமத்தில் தியானத்தில் ஆழ்ந்திட்டான்
ஸ்கந்தகுரு கவசத்தை அனுதினமும் செப்பிடவே
உகந்த நன்னிலையை உடனேயே அளித்திடுவான்
சுகந்த மலர்களால் அவனையே அருச்சித்தால்.

100. சட்டிதனில் இருந்திட்டால் அகப்பையில் வந்திடுமே
சட்டி விரதமே தலையாய நெறியாகும்
மெய்யினில் சூக்குமத்தை சிரத்திலே தந்திட்டு
ஆத்தும சக்தியுடன் வேலனைச் சரணடைவோம்

101. முத்துக்கு மாரஸ்வாமியே புள்ளிருக்கு வேளூரில்
தத்துவப் பரம்பொருளாய் ஓங்கி நின்றாய் நீ
தரணியிலே தான் தோன்றி தெய்வமாய் வந்தாய்
அரகரா என்றுன்னை பாடித் துதித்திடுவோம்.

102. பந்தமெல்லாம் அகற்றிடுவாய் உமையம்மை பாலனே
சொந்தமெல்லாம் காத்திடுவாய் சொற்கவி மால் மருகா
ஆதிமூலம் அந்தமெல்லாம் நீயே வேலவா
சோதியாக வந்தவா பிணியெல்லாம் நீக்குவாய்.

103. அன்பே முருகன் ஆனந்தமே சரவணன்
சத்தியமே என் தலைவன் சாந்தமே குருபரன்
தர்மமே தண்டபாணி கருமமே கதிர்காமன்
மதியொளியே சண்முகன் மட்டளவே வேலவன்.

104. நாலடிகளால் நான் துதிப்பேன் நாதமுனி தேவனே
நன்றியுடன் நான் வணங்க ஆசீர்வதிப்பாய்
நான்முகனே வேதங்களின் தலைவனென்றால்
ஆறுமுகன் முத்தமிழுக்கு வேதபுரியாவான்.

105. மணியின் ஒலியெலாம் சுப்பிரமணியென விளங்கும்
கடலின் ஒலியெலாம் ஓங்காரத்தை செபிக்கும்
மலையின் ஒலியெலாம் அரகரா என்றிருக்கும்
இடிமழை உருவெளியெலாம் உன் நாமம் போற்றும்.

106. சூராசூரா என்பதெல்லாம் அசுரசக்திகளாம்
வேலாவேலா என்பதெல்லாம் மனித இறைஞ்சலாம்
ஞானவேலேஉன் மனத்தில் சோதிரூபமாகும்
மோனமான நிலையிலும் அறிவொளியினை யளிக்கும்.

107. பட்டென்று பிளந்திட்டதுசூரனின் மகேந்திரம்
சட்டென்று வந்த ஷண்முகனின் சினவொளியில்
கெட்டவைகளின் முடிவெல்லாம் வடிவேலனருளினால்
மற்றவை சதமில்லை மாயமான வாழ்க்கையில்

108. ராமனைப் பார்த்திட்டோம் கடமையின் உருவிலே
கண்ணனைப் பார்த்திட்டோம் நீதிரூப வடிவிலே
வாயுபுத்திரனைக் கண்டிட்டோம் தாசரதிதாசனாய்
கந்தனைக் கண்டிட்டோம் ஞானகுருமூர்த்தியாய்.

109. வேலெடுத்து எழுதிவிட்டான் அண்ணாமலை தனிலே
மால்மருகன் நின்றுவிட்டான் அண்ணாமலைதனிலே
அருணைப் புலவனுக்கு கருணையைக் கொடுத்துவிட்டாய்
எனக்குக் கொடுத்திடவே உன்னிடம் ஒன்றுமேயில்லையா.

110. செயக்கொடி நாட்டிடுவான் என் வயலூர் முருகன்
அயனாரும் மாலரும் சிவனும் போற்றிடவே
வேலை நினைந்திட்டால் கலிதோஷ வினையகலும்
வேலைப் பூசித்தால் பக்தமார்க்க நிலைகிட்டும்.

111. தென்னாடுடைய சோதியே வேலா தமிழ்க்குமரா
என்னாளும் பக்தர்களுக்கு மேலான இறைவனே
என்னிலைமை என்னாகும் நீயே சினந்திட்டால்
தன்னளவில் அதற்காக நான் நீதிமானாயிருந்திடுவேன்.

112. எத்துணை சோதியுன்முகப் பிரபாவத்தில்
அத்துணை எழிலுமே எத்தேவருக்கு மில்லையாம்
கடைக் கண்ணருளினாலே இத்துணை வாழ்வுதந்தான்
அகக் கண்ணால் என்னைப் பார்த்திடடா சக்திவேலா.

113. உமையவளே பூரித்தாள் உன்சினமென்னும் பாணியினை
மூன்றுமுறை சினந்திட்டாய் தேவலோகம் தனிலே
அயனவரைச் சினந்திட்டாய் பிரணவம் மறந்ததினால்
சிவனவரை சினந்திட்டாய் பழனிமலை முகட்டினிலே

114. வள்ளிநங்கை எப்பேறு பெற்றிற்றாள் உனையடைய
அவ்வையன்னை எப்பேறு பெற்றிற்றாள் தமிழடைய
சூரனவன் எப்பேறு பெற்றிற்றான் தஞ்சமடைய
புல்லேன் எனக்கு நீ ஞான மார்க்கம் தருவாயா.

115. கஞ்சமலை சித்தருன்னைத் தஞ்ச மடைந்துவிட்டார்
கருவூரின் சித்தரவர் உன்னிடம் ஞானமார்க்கம் பெற்றிற்றார்
பாம்பாட்டி சித்தருன்னை போற்றியே வாழ்ந்திட்டார்
ஸ்கந்தகிரி குருநாதாநீ தத்துவப் பரம்பொருளே

116. நானென்னும் அகந்தையை நான் எப்போதே விட்டிட்டேன்
நானாநீயா என்ற போராட்டம் நீக்கிடுவாய்
ரத்னகிரி இறைவனிடம் நான் சரணடைந்து விட்டேனே
மெத்தனமாயிருக்க வேண்டாம் வீடுபேற்றைத் தந்திடுவாய்.

117. மதியாலே எல்லாமும் மனிதன் அடைந்திடலாம்
மதியினை மதியுடன் நடத்திட வேலனருள்வான்
மதிசூடிய ஈசன்தந்த மதியான சோதிநீயே
மதியால் விதியினை மாற்றிடலாம் கந்தனருளாலே.

118. நவ வீரர்களெல்லாம் தான் நவக்கிரகங்களா
நவ வீரர்களெல்லாம் தான் நவமான திக்குகளா
நவராத்திரி நன்னாளில் உன்னெழிலைத் துதிப்பேன்
நவக்கோள்களினாலே எனக்குத் திருவருளைத் தருவீரே.

119. அன்புடைய ஆசனாய் உன்னையே நான் துதிப்பேன்
பண்புடைய கடவுளாய் அருள்மந்திரம் தருவாய்
செந்தமிழால் உனைத்துதிக்க மார்க்கம் அருள்வாய்
மண்டிப் புலம்புகிறேன் தடுத்தாட் கொண்டிடுவாய்.

120. வாட்போக்கி தனிலே உன்னை நான் தரிசித்தேன்
கற்தேர்தனிலே வள்ளி தேவானையுடன் தரிசித்தேன்
கருவாகி நீ என்னை ஆட்கொண்டு விட்டனையே
செருக்குடன் பகருகிறேன் உனக்கீடான தெய்வமில்லை.

121. மெய்யுடல் ஆவிதனை நீ சொந்தமாக்கிவிட்டாய்
செய்கின்ற கருமங்களை நீ வழி நடத்தி வருவாய்
இரத்னகிரி முருகனே நீயென்னை அடிமையாக்கினாய்
பாலமுருகனுக் கடிமையாக நான் பாக்கியம் செய்தனனே.

122. காங்கேய நல்லூரில் வாரியார்அவதரித்தனரே
காங்கேயனை நான் எத்துணைமுறை தரிசித்தேன்
என்னுடைய படிகளிலெல்லாம் நீதாங்கி நின்றாய்
மன்னவனே நீயே எனது கண்கண்ட தெய்வம்.

123. உலகிலே நீயில்லை யென்று சொல்பவருண்டு
அலகிட்டு நோக்கவேண்டும் உனது தோற்றம் தனை
மணியிலே ஒலியானான் இடியிலே ஒலியானான்
மின்னலில் ஒளியானான் தீயிலே ஒளியானான்.

124. ஆறுமுகம் ஆறுதிக்குகளில் காத்திடுமே
ஆறுநாவும் அறுசுவையையே விளம்பிடுமே
அறுதியிட்டு கூறுகிறேன் ஏற்றம் கொடுத்திடுவாய்
மறுபிறவி அகற்றிடடா தண்பாணி குருநாதா

125. ஆழி சூழுலகினை மயில் மேலே சுற்றிவந்தாய்
ஊழிப் பெருந்துயர் படும் மாந்தரைப் பார்ப்பதற்கே
சூழ்ந்திருக்கும் கபடு சூது வாதம் இவைகளையே
ஆழ்ந்தகற்றி நெறிமுறைகளைக் கொடுப்பதற்கே.

126. பச்சைமலைக்கு ஒருநாள் நான் வரவேண்டும் ஐயா
இச்சையிலே எப்போதும் நான் இட்டிருந்தேன் ஐயா
கொச்சையான தமிழினிலே அகவற்பாடிருந்தேன் நானே
மெச்சிடுவாய் எனக்கு வீடுபேறு கிட்டிடுமா.

127. குன்றிருக்கும் இடமெல்லாம் நீயேனிருக்கிறாய்
குன்றினிலிருந்திட்டாய் குறிஞ்சித்தேவராகவே
மலைமேலிட்ட விளக்கு போன்ற கடவுளாம்
மலையெனவே உயர்த்திடுவான்வாழ்க்கை யளவையே.

128. அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுப்பான் முருகன்
அகழ்ந்தெடுப்பதைக் காட்டவே வள்ளிமணாளனாயினான்
குறிப்பறிந்து கொடுப்பவன் குறிஞ்சிக் கோமான்
வருத்தமகற்றிடுவான் மெய்துஞ்சும் நிலையிலே.

129. வேலெடுத்து நின்றவன் ஸ்கந்தகிரி குருநாதன்
பால்காவடி எடுத்து அவனை வழிபடுவோம்
பால்போன்று சிந்தையினை மேவிவாழ்ந்திடவே
பால் சொரிந்து நாம் அவனை வேண்டிடுவோம்.

130. செந்தூர் புரிதனிலே நாம் காண்கின்ற காட்சி
எம்பெருமான் சன்னதியில்மயிலும் யானையுமே
குருவின் அவதாரம் செந்தில் வேலவன்
குருவுக்கு எப்போதும் வேழம் பணிந்திடுமே.

131. வேலை மாநகரத்தில் சுப்ரமணியக் கடவுள்
பேரிவனம் தனிலே யானையுடன் அவதாரம்
வள்ளிதேவசேனை சமேதராய் கடவுள்
மெல்ல எழுந்தருளிட்டார் பக்தர்களுக்காகவே.

132. கார்க்கோடகன் என்றவன் அரவுக்கரசன்
சேர்ந்திட்டான் மயிலின் இரு மருங்கினிலே
அரவுக்கும்மேல் நிலையைத் தந்திட்ட சோதி
பறவைக்கும் அருள் தந்த சாந்தமானசோதி

133. கற்பனைக் கெட்டாத காருண்யக் கடவுள்
சற்றிலும் எதிர் பாராது தடுக்கிடும் தருணங்களில்
மெய்யாகவே வந்துநின்று தாங்கியசம்பவம்
பொய்யில்லை எத்துணை முறை காட்சி கொடுத்திட்டான்

134. அரகரசிவ என்று மனதில் நினைந்திட்டால்
அரோகரா என்று நாவிலே பகர்ந்திட்டால்
சட்டென வந்துநிற்பான் காருண்ய மூர்த்தி
மட்டில்லா மகிழ்ச்சிதனை பக்தனுக்களித்திடவே.

135. நிர்க்கதியாய் நாம் நின்று தடுமாறும் சமயம்
சற்குணத்தினால் அருள் பொங்கும் ஆண்டவசொரூபம்
பொற்பொதும்பை தேவக்களிறுடன் வருவான்
துர்க்குணங்களை அடியோடு அழித்துவிரட்டிடவே.

136. மலைமாதா உமையவளின் அன்புக் கடவுள்
சிலையாக நின்றிட்டான் பக்தர் குறைதீர்க்க
யாமிருக்க பயமேன்என்றே பகர்ந்திடுவான்
சுவாமிநாத சுவாமியவன் உபாயம் அருளிடுவான்.

137. திருவேரகம் தனிலே தந்தைக்கு உபதேசம்
திருவருணை தனிலே அருணகிரிக்கு உபதேசம்
திருவாவினன் குடிதனிலே அவ்வைக்கு உபதேசம்
திருத்தணிகை மலைதனிலே பக்தர்க்குபதேசம்.

138. மருதமரங்கள் நிரம்பியதாம் மருதமலைக்குன்று
மாருதம் எப்பொழுதும் சூழ்கின்ற மலைக்குன்று
பாம்பாட்டி சித்தர்குகையில் மேவி நின்றார்
மேம்பட்டு கந்தனின் ஆலிங்கனம் சிக்கிடவே.

139. அருணகிரிக்கு நாவில் தமிழை எழுதிட்டாய்
அவ்வைக்கு மெய்யிலே தமிழினை அருளிட்டாய்
பாம்பன் சுவாமியே உனக்கு கவசம் செப்பிட்டான்
தேவராயன் தந்திட்டான் மெய்வீட்டு வழியினையே.

140. எங்கெல்லாம் நோக்கிடினும் நீயே நின்றிடுவாய்
சங்கினிலே ஓங்கார நாதம் கொடுத்திடுவாய்
சூரனே எத்துணை இறும்பூது எய்திட்டான்
ஆறுமுகன் பாதங்களில் சரணாகதியடைய.

141. உன்னுடன் என்னையே இரண்டறக் கலந்திடுவாய்
மன்றியே வேண்டுகிறேன் எப்போதும் உனையடைய
போதும் போதுமடா காயத்தின் வேதனைகள்
சோதனைகள் நிறைந்த ஜீவனை முடித்திடடா.

142. தண்டபாணித் தெய்வம் சிறுவனாகத் தண்டெடுத்தான்
தண்டம் கையில் இருந்தால் தட்டிக் கேட்டிடலாம்
ஆண்டி அலங்காரம் உனக்குத் தேவைதானா
அயிஸ்வர்யங்கள் பாரினிலே உனக்கே அதிகமாம்.

143. சீர்தூக்கி நிறுத்திடடா வாழ்க்கைச் சக்கரத்தை
நேர்கோட்டில் செலுத்திடடா மனத்தின் துலாக்கோலை
பார் எல்லாம் பார்த்திடுவேன் உன் கருணை மழையாலே
வேர் ஊன்றி நின்றிட்டேன் உன்னருளை வேண்டிட்டேன்.

144. கொஞ்சும் அழகாகும் நின்முகப் பிரபாவம்
முருகென்றால் அழகென்று தமிழில் பொருளாகும்
சொக்கும் அழகுடன் விராலிமலையில் நின்றாய்
பக்கத்தில் வள்ளி தேவானைத் தோற்றத்துடன்.

145. பழத்தில் சுட்டபழம் உண்டென்று பகர்ந்திட்டார்
பழம் நீயென்று மாந்தருனைப் பகர்ந்திட்டார்
சுட்டபழம் மனத்தின் பக்குவத்தைக் குறிக்குமாம்
சுடாத நிலையிலே கந்தனருள் கடினமாகும்.

146. மடமானின் வயிற்றுதித்த நங்கை நல்லாள் வள்ளி
மடமானே தாட்சண்யத்தின் மேலாக நிலையாகும்
மானாகக் காட்டியது சாந்தகுண நங்கையாகும்
மானாக வந்தது தரும தேவதை உருவாகும்.

147. மாயமான் காட்டிதான் சீதையை அபகரித்தான்
நேயமான் மனிதரிடம் பாசத்தைக் காட்டிடுமே
மங்கை வள்ளி பயிர்ப்பின் அவதாரமாகும்
மங்கை வள்ளியவளே கிரியை சக்தியாகும்.

148. பாலமுருகன் நிரம்பவே குறும்புகள் செய்தான்
பாலமுருகனே தேவ சேனாபதியாக ஆகினான்
முருகன் கடைக்கண் நோக்கிலே ஞாலம்
முருகனின் அருளிலே சீலமாக வாழ்ந்திடலாம்.

149. இந்திரபுரியாகும் இந்திரபிரஸ்த நகரமாகும்
இந்திரபுரியிலே மலைக்குன்று மலைமந்திராகும்
உத்திரசுவாமி மலையிலே நின்றிட்டான் குகனாக
திருவேரகம் தமிழ்மண்ணில் மலைமந்திர் தலைநகரில்

150. வள்ளிமலைக் குன்றிலே எழுந்திட்டான் முருகன்
தெள்ளுதமிழ் திருப்புகழ் ஒலியினைக் கேட்கவே
இன்றே சென்றிடுவீர் வள்ளிமலைத் தலத்திற்கே
மன்றாடி வேலனின் அருளைப் பெறுவதற்கே.

151. எல்லாம் துறந்திட்ட ஆண்டியின் திருக்கோலம்
வெல்லவே முடியாத சூரனை அழித்திட்டதா
நல்லவை செய்திடல் முருகனின் புகழாகும்
திருப்புகழை பகர்ந்திட்டால் தீவினை ஓடிவிடும்.

152. ஆடி அடங்கிவிடும் உயிர் மூச்சுநின்றுவிடும்
தேடி அடைந்திட்ட செல்வமெலாம் போய்விடும்
நாடிடும் நல்வினைகள் தான் கூடவந்திடுமாம்
வீடுபேறு பெற்றிட முருகனை நம்பிடடா.

153. முத்தமிழில் உன்னைத் துதித்து வணங்கிடுவேன்
பத்துமலைமுருகா பரஞ்சோதி யானவனே
அத்துபடி எனக்குந்தன் அழகு வருணனைகள்
சித்தமெல்லாம் நிறைந்திருந்து அருளைத் தந்திடுவாய்

154. புலிப்பாணி சித்தர் உன்னைப் பாடி வணங்கிட்டார்
சலிக்காது என்னுள்ளம் உன்னைத் தொழுதிடவே
சிவனே என்றிருக்கின்றேன் சும்மாயிருந்திடுவேன்
அவனே வேலுடன் என்னுள்ளே நிற்கின்றான்.

155. சோதனைகள் ஏராளம் வேலனின் பக்தருக்கு
வேதனைகள் சிறிதுமில்லை சோதனை வரும்போது
தண்டம் நின்றிட்டு மனவலிமை தந்திடுமே
சண்டமாருதத்தில் வேல் வந்து அருளிடுமே

156. சண்முகக் கவசத்தை விரும்பிச் செப்பிட்டேன்
கண்ணெல்லாம் குளமாகி உன்முன்னே நின்றிட்டேன்
கார்த்திகை மைந்தனடா கதிர்காம வேலனவன்
பார்த்திடலாம் விசுவரூபம் பரிவாக வாழ்ந்திட்டால்.

157. சிந்தையிலேதான் தோன்றி என்னுள்ளேஇருப்பாய்
புந்தியிலே இட்டிருப்பேன் வந்தனைகள் செய்திடுவேன்
அருளே குருவே ஆறுமுகா நீ எப்பொழுதும்
என் தவறை மன்னிப்பாய் நன்றாக வாழ்த்திடுவாய்.

158. சிரங்குவிந்து கரங்குவித்து உன்னை வணங்கிடுவேன்
பரங்குன்றில் இருக்கும் பரமான தேவனே
பண்பான வாழ்க்கையே மேலான வாழ்க்கை
கண்ணான தெய்வமே காத்திடடா எப்போதும்

159. வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
சேவலுண்டு மதமில்லை தலையுண்டு கனமில்லை
பீறுண்டு மிடுக்கில்லை குணமுண்டு சினமில்லை
நீறுண்டு சோர்வில்லை ஆசிடுவாய் முருகய்யா.

160. எனை மறந்திட்டேன் கந்தனே கடம்பனே
உனை நினைந்திட்டேன் வள்ளி மணாளனே
தாளினைப் பணிந்திட்டேன் என் தமிழ்க்கடவுளே
நாள்தோறும் அனுபூதியில் திளைத்திட்டேனே

161. மங்காத நிலைதருவாய் காருண்ய மூர்த்தியே
செங்கோட்டு வேலவனே தருநிழல் தந்திடுவாய்
எங்கள் குடியாகும் மந்த நிலையடையாமல்
பொங்கும் நிலை தந்திட்டாய் பழனிமலையப்பனே.

162. திருமைலம் தனிலே வள்ளி தேவசேனை சமேதனாய்
கருத்தினிலே விளைந்திட்டாய் கிரியை இச்சை சக்தியுடன்
தேறிநின்றேன் அப்பியாசங்கள் பலசெய்து நானே
ஏறிநிற்பாய் மனக்குன்றில் ஞானசக்தி ஈசனாக.

163. அய்யப்பன் சோதரனே ஆதிமூலப் பரம்பொருளே
மெய்யன்பு தான்கொண்டு உன்னையே பூசிப்பேன்
நெய்யிலே திரியேற்றி சஷ்டியிலே வந்தித்தேன்
செய்திட்டா உன்னுடைய குறையில்லா அருளதனை.

164. ஆதாரம் நீயே ஆதிமூலப் பரம் பொருளே
நீதானே எனக்கு எல்லாமும் எப்போதும்
கடைசி மூச்சுவரை உன்னையே பிடித்திருப்பேன்
மடைதிறந்து விட்டிடுவாய் உன்னுடைய அருளினையே

165. கலாப மயில்களெல்லாம் களி நடனம் செய்திடுமே
எலாம் என விளங்கும் விராலிமலை தனிலே
பாதாரவிந்தத்தை சரணம் அடைந்திட்டேன்
சேதாரம் இல்லாமல் என் சீவனைச் செலுத்திடுவாய்

166. அறுபது வருடங்கள் தமிழில் ஒரு சுற்றாகும்
அறுபதுவருடங்களைப் படியாகக் கொண்டிட்டாய்
திருவேரகம் தனிலே தகப்பனுக்கு நீ ஆசானானாய்
தகப்பன் சுவாமியே நீ சரணாகதி தந்திடுவாய்.

167. ஆடிநின்றாய் தோகை மலைமுகட்டினிலே ஐயா
ஓடிவந்தோம் உனையே சேவித்திடவே ஐயா
வெண்ணெய் மலையினிலே குருவாய் நின்றிட்டாய்
வெள்ளிமலையிலே நான் வந்து பணிந்திட்டேன்.

168. வெற்றிவாகை சூடி நின்றாய் திருச்செந்திலம்பதியில்
வெற்றியடைய வேண்டுமெனில் செந்தில் நகர்வரவேண்டும்
ஓம் எனும் பிரணவத்தை எப்போதும் கேட்டிடவே
ஓங்கார சொரூபமாய் கிழக்கு நோக்கி நின்றிட்டாய்

169. கருப்பத்தில் வளராத தமிழ்த் தெய்வம் நீயானாய்
செருக்குற்ற மாந்தர்க்கு சிம்ம சொப்பனமானாய் நீ
மறுக்கவில்லை நீயேதான் எனக்கு உயர்வளிப்பாய்
பொறுக்கவேண்டும் அடியேனின் குற்றங்களை நீயே.

170. சிந்தனைச் சிற்பியே வந்தனை நான் செய்வேன்
நொந்திட்டேன் என்னுடைய நிலையில்லா சீவனையே
குந்திவரம் கேட்டேன் உன்னுடைய சன்னதியில்
சொந்தமெல்லாம் விட்டுவிட்டேன் உன்னுடைய சன்னதியில்

171. மறுகிவிடும் துக்கமெல்லாம் முருகனின் பெயர்சொன்னால்
இறுகிவிடும் மனமெல்லாம் உன்னிடமே இளகிடுமே
அறுதியிட்டு தினமுரைப்னே உன்னுடைய பெருமைதனை
இறுதிநாள் அடையு முன்பேக திர்காமம் வந்திடுவேன்

172. சென்னியைப் பதித்திட்டேன் நின்மலர்ப்பாதம் தனிலே
சென்னிமலை வேலனே செருக்கினை அழித்திட்டா
செங்கமலத்தில் உதித்த முருகா திருக்குமரா
பங்கயமாம் பன்னிரு கரத்தினால் அருளிடடா.

173. கபிலர் உனைப் பதித்திட்டார் கபிலர் மலைதனிலே
கயிலாயம் போன்றதடா உன் கபிலர் மலைதானே
அத்துணை உயரத்தில் நீ நின்றதனால் நானே
மத்துனை அடைய மயிலிடம் வேண்டிநின்றேன்

174. கங்கைதனில் பத்மமதில் வளர்ந்திட்ட முருகன்
காங்கேயன் என்றவனை மனமும் ஏத்திடுமே
காங்கேய நல்லூரில் அவதரித்தார் வாரியார்
காங்கேயன் வள்ளி தேவயானையுடன் ஆலிங்கனமானாரே

175. நான் பார்த்த நாயன்மாராம் வாரியார் முனிகள்
தேன் போன்ற திருப்புகழை நாளும் செபிப்பாராம்
மன்பதையில் புகழேயாம் அருணகிரி வாக்கேயாம்
என்பதனை உருக்கிடுமே மனதினை மயக்கிடுமே.

176. குருவானான் எனக் கென் சுவாமி மலைமுருகன்
குருவாகவே நின்றிட்டான் அப்பன் சுவாமியாக
தந்தைக்கு மந்திரத்தை செவியில் பகர்ந்திடவே
தந்தையாம் அரனே வாய் பொத்தி நின்றிட்டான்

177. மும்மலம் அகன்றிடவே சன்னதியில் நின்றிடுவாய்
எம்மதமும் மதித்திடுமே சம்மதமாய் சண்முகனை
வெட்சிமலரதனை சென்னியிலே சுமந்திட்டான்
குறிஞ்சித் தலைவனாம் குகனே சரவணனே

178. பால்காவடி எடுத்து ஆடிட்டேன் முருகா
பழனி மலையில் உன்னைப் பார்த்திட்டேன் முருகா
மால்மருகா வள்ளி மணாளா நீதான்
மேல் குன்றில் ஏன் நின்றாய் கோபம் நிறைந்திட்டே

179. சுற்றமெல்லாம் சுற்றிநின்று புலம்பிட்டே அழுதார்
சுற்றமெல்லாம் மாயையே முருகனே சத்தியமாம்
அரோகரா அற்புதனே ஆனந்த வடிவேலா
தங்கத் தேரில்வலம் வருவாய் தணிகை வேலனே

180. சங்கத் தமிழில் எனது வேலனை வந்தித்தேன்
பொங்கும் அருளை நீ எப்போதும் தருவாயே
படைப்புத் தொழில் செய்ததினால் பிரம்மனாயானாயோ
அழித்தாய் சூரனை சம்ஹார மூர்த்தியாகவே.

181. மாதவன் திருமால் மருகன் முருகனை
சோதரன் கணபதி செவ்வேள் தலைவனை
கோதுகள் இல்லா அறுமுக வேலனை
பாதமலர் பணிந்தேன் அருள்வாய் வீட்டினையே

182. தன்னிகரில்லாத் தேவனைக் கண்டேன்
மன்னுயி ரெல்லாம் புரந்தாய் வடிவேலா
திருவேரகத்திலும் கண்டேன் கார்த்திகேயா
மறுபிறவி நீக்கிட உன்னையே சரணடைந்தேன்

183. ஹரனும் ஹரியும் பிரமனும் மூவரும்
கௌரியும் லஷ்மியும் வாணியும் மூவரும்
ஆறுமுகத்துடன் ஒன்றாய் நின்றனர்
ஆறிரு கண்களால் அருளதனைத் தந்தனர்.

184. சண்முகத் தேவன் என்னுயிர் குருவே
பன்முகம் கண்டு அருளினைப் பொழிந்தான்
ஆறிரு கரங்களில் ஆருயிரை அருளினான்
அறு நான்கு பொழுதில் கவசம் கொடுப்பான்

185. சூக்கும மெய்யதனில் உயிராய் நின்றவன்
தேக்கிட்ட பலமதனை அருளினால் தருவான்
சீவனே முருகன் ஆனதனால் நாமே
சீவனையடக்கி வழிபாடு செய்திடுவோம்.

186. நன்றுடையான் தீயதிலான் கார்த்திகேயன்
குன்றினிலே நின்றிட்டான் தண்டபாணியாக
பஞ்சாமிர்த அபிஷேகம் பஞ்சபூத வழிபாடு
நெஞ்செல்லாம் நிறைந்திடுமே கண்கள் குளிர்ந்திடுமே.

187. தவசிமலைதனிலே நீ கொண்டாய் தவக்கோலம்
செந்தில் புரிதனிலே நீ கொண்டாய் போர்க்கோலம்
விராலிமலை தனிலே நீ கொண்டாய் அருள் கோலம்
வடபழனித் தலத்தினிலே நீ தந்தாய் விழக் கோலம்

188. வள்ளிமலைதனிலே நீ தந்தாய் மணக்கோலம்
சுவாமி மலைதனிலே நீ தந்தாய் குருக்கோலம்
ஆவினன்குடி தனிலே நீ தந்தாய் சினக்கோலம்
அழகர்மலை யினிலே நீ தந்தாய் திருக்கோலம்

189. மாசற்று விளங்கிடுவாய் சுப்ரமணியக் கடவுளே
பாசமுடன் உனைநான் வேண்டிடுவேன் தினமே
பரங்குன்றில் தெய்வக் களிற்றை மணந்தவனே
சிரம் தாழ்ந்து நின்றேன் உன்னைச் சரணடைந்தேன்

190. பட்டாடை போர்த்தி வழிபட்டேன் ஐயா
பட்ட அல்லல்தனிலின்று விடுபட்டேன் நானே
பட்ட மரமும் தழைத்திடுமே உனது ஆசியுடனே
சட்டெனவே வந்து நிற்பாய் கலாப மயில்மேலே

191. வயலூரில் உனைநானே பணிந்திட்டேன் ஐயா
செயலெல்லாம் உனதாகிக் கருதிட்டேன் ஐயா
என் கண் முருகனே எனக்குக் கண்ணாகிவிட்டனனே
எட்டுக்குடி வேலவன் எனது குடியை உயர்த்திட்டான்.

192. குமர கோட்டத்தில் குமரகுரு பாடிட்டார் உனையே
அருணகிரியினிலே கிரிநாதர் திருப்புகழைப் பாடிட்டார்
தேவராய முனிவர்கள் கவசம் பாடிவணங்கிட்டார்
நானும் பண்பாடி தொழுதிட்டேன் வந்தருள்வாய்

193. சாதனைகளைச் செய்திடவே வேல் வணக்கம் செய்திட்டேன்
சோதனைகளைப் போக்கிடவே கவசம் படித்திட்டேன்
மாதவம் செய்திடவே அலங்காரம் வாசித்தேன்
வீடுபேறு கொடுத்திடடா அநுபூதிப் பேறுடனே

194. மலர்க்காவடி யெடுத்து நான் பழனி மலை யடைந்தேன்
மலர்ப்பாதம் கண்டிட்டேன் மனமே நெகிழ்ந்திட்டேன்
பன்னீர்க்காவடியெடுத்து நான் பரங்குன்றம் ஏறிட்டேன்
பக்தியுடன் பன்னீரால் உனையே நீராட்டிடவே

195. இருகூராய்ப் பிளந்திட்டதாம் வேங்கை மரமேதான்
இருகூராய் செருக்கடைந்த மெய்யினைப் பிளந்திடவே
எனதென்பது என்னிடம் ஒன்றுமேயில்லையே
என்னையே பிளந்தாலும் காண்பது உன்னுருவே

196. தேவர்களின் தானைத் தலைவனே சேனாபதியே
தேவர்களை சிறைமீட்ட செந்தில் முதல்வனே
தேவர்களுக்குத் தேவனான சண்முகப் பெருமானே
தேவர்களின் நிலைதருவாயா தேவர் வணங்கும் முருகனே

198. வீரமகேந்திரபுரி உன்னிடம் வீழ்ந்துவிட்டது அன்று
வீரபாகு முதலாம் நவவீரர்களின் தோள் வலிவிலே
வீரனாம் கார்த்திகேயனுக்கு இதுவிளையாட்டல்லவா
வீரமார்த்தாண்டவேலனே வீரபாகுவின் தனயனே

199. கோட்டியூர் என்பதாகும் திருமாலின் அம்பதியே
கோட்டியாக அமர்ந்திட்டார் மூவரான அம்பதியே
கோட்டியென சாட்சியாக வேலெடுத்து நின்றவன்
கோட்டி நாழிக் கிணறு தந்த செந்திலாராம் வேலனே

200. சினமெல்லாம் தணிந்து நின்றான் திருத்தணிகைக் குன்றினிலே
சினமதனை ஆற்றிநிற்பார் இருபுறமும் தேவியர்
சினந்திடுவார் தணிகாசல வெற்றிவேலா ஈசனே
சினமென்னும் குணமதனை அவன் பக்தரடைந்தால்

201. வேல்முருகா மால்மருகா தணிகை வெற்றிவேலனே
வேல்கொண்டு நின்ற இறைவா தண்டபாணித் தெய்வமே
வேல்கொண்டு விரட்டிடடா தீமைகளாம் புயலினை
வேல் கொண்டு எழுதிடடா என் நாவில் தமிழினையே

202. சரவண நாதனே சண்முக நாதனே
பரமபத நிலையருளும் தண்டபாணித் தெய்வமே
ஆறிருதடந்தோள் அருளினை அளித்திடுமே
ஈராறு கண்களும் மேன்மையைத் தந்திடுமே

203. பணிந்து வணங்கிட்டேன் கார்த்திகேயனே
தணிகைமலை வாழும் வெற்றிவேல் முருகா
மனமென்னும் ஆலயத்தில் உன்னை இருத்திட்டேன்
மயில்மேலே எழுந்தருளி அருள்செய்வாய் நீயே

204. மாதவமே நான் செய்ய ஆசி கொடுத்திடுவாய்
மாதவனின் மருகனே வடிவேலா திருக்குமரா
பாமாலை பாடிட்டேன் பதமலர் பணிந்திட்டேன்
மாந்தர்கள் அனைவருமே சுகமாக வாழ்ந்திடவே

205. இறைனுக்கு இறைவனாம் சண்முக வேலனே
மறையோர்போற்றிடும் தண்டாயுத பாணியே
கணபதி சோதரனே ஆதிமூலப் பரம்பொருளே
வணங்கி வழிபட்டேன் மேன்மை அருள்வாயே

உருவாய், அருவாய், நின்ற ஞானக் கடவுளை
தேவ சேனாபதியாம் வேல் முருகனை, கந்தனை,
கடம்பனை ஆறிருதோள் ஈசனை, எனது மனம்
வாக்கு, மெய், இவற்றின் மூலம் வேண்டி இந்த
பாமாலையை அவனது பாதாரவிந்தத்தில்
சமர்ப்பித்துள்ளேன். இவைகளை ஏற்றுக்கொண்டு
அருள்தருவான் என்பது திண்ணம்.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா
ஞானவேல் முருகனுக்கு அரோகரா
சக்திவேல் முருகனுக்கு அரோகரா
சூர சம்ஹாரனுக்கு அரக ரோகரா

– பரிதிமதி



## ஆசிரியர் பற்றி குறிப்புகள்

ஆசிரியர் திரு. இரவிச்சந்திரன் (பரிதிமதி) மருத்துவ இயல்பியல் பேராசிரியர் தமிழ்ப்பற்றினாலும், மனதில் உள்ள இறைவனிடம் நம்பிக்கையாலும் பாடல்கள் புனைவதில் ஆர்வம் உள்ளவர். அவர் தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெங்களூர் கித்வாய் புற்று நோய் ஆராய்ச்சிக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து, பிறகு ஓமான் நாட்டில் பேரரசர் மருத்துவக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். இந்த முருகன் பாமாலையில் அவர் ஆறுமுகனின் எழில் கோலங்களையும், கந்தனின் சூரஸம்ஹார வீரச் செயலையும் விவரித்து, உலக குருவாக திருச்செந்தூரில் நின்று ஆட்சி செய்யும் கருணையை விவரித்து திருமுருகன் பாமாலை என்ற நூலைப் பணிவன்புடன் படைத்திருக்கிறார். மேலும் அவர் பெரியாண்டவர் பாமாலை, அரங்கனின் திருவருள், அஞ்சனை மைந்தன் பாமாலை, அரனின் திருவருள், பிள்ளையார் மணிமாலை என்ற மற்ற படைப்புகளையும் அருளியிருக்கிறார். எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பார் என்ற நம்பிக்கையுடன் இந்த பக்தி நூலை சமர்ப்பிக்கிறார்.

– பரிதிமதி

ஆசிரியர்முகவரி:

**Prof. Dr. R. RAVICHANDRAN**
F 101, Ram Adithya Apartments,
19/6 Nagappa street, PIPELINE
‘A’ Cross Malleswaram,
Bangalore - 560 003. **KARNATAKA**